

# சேர்ந்தே கற்போம் படிப்படியாக செல்லும் வழி

டொரான்டோ நகரம்/ ஆரம்ப குழந்தைப்பருவ சேவைகள் குழு: டொரான்டோ சமூக வாழ்க்கை/ சர்ரே பிளேஸ் மையம்

*குறிப்புப் பக்கம்*

# கை கழுவும் செயல் முறை வரிசை

புதிய திறமைகளை கற்றுக்கொள்ளும் போது, பெரும்பாலான குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகிறது. அந்த வழி முறைகளை சிறிது சிறிதாகப் பிரிப்பதனால், குழந்தை ஒவ்வொரு வழி முறையாக கற்க முடியும். ஒரு குழந்தையைப் பொருத்தே அந்த வழிமுறைகளைப் எத்தனை சிறு பாகங்களாக பிரிப்பது என்பது அமையும்.

உங்களுடைய குழந்தைக்கு ஒரு தொடர் படக்காட்சியை அளிக்க விரும்பலாம். இது அடிப்படையாக, தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும். நீங்கள் நிஜமான புகைப்படங்களையோ, வரி வடிவங்களையோ, அல்லது படக் குறிப்புகளையோ பயன்படுத்தலாம். படக் காட்சித் தொடரைப் பயன்படுத்தும்போது, உங்களுடைய குழந்தையின் கண் பார்வையில் படும்படியாக அமையுங்கள். அந்தப் படத்தைக் குறிப்பிட்டு அதன் வழி முறைகளை உரக்கப்படித்துக் காட்டுங்கள்.

உங்களுடைய சொந்த செயல் முறை வரிசை விளையாட்டை உருவாக்க படங்களை பயன்படுத்தலாம். அந்தப் படங்களின் பிரதியை எடுத்து, பின்னர் அதை வெட்டி எடுத்து, அவற்றை வரிசைப்படி வைக்க உங்களுடைய குழந்தைக்கு பயிற்சி கொடுங்கள். அந்த படங்களை இரண்டு பிரதியாக எடுத்து, ஒரு தொகுதியை வரிசைப்படி அட்டையில் ஒட்டிவிடவும்,அதை பயன்படுத்தி, மற்றொரு பகுதியை உங்களுடைய குழந்தையை சரியாக வரிசைப்படுத்த வையுங்கள்.

உங்களுடைய குழந்தைக்கு, கழிப்பறையை பயன்படுத்திய பின்பும், சாப்பாட்டுக்கு முன்னும், பின்னும் மற்றும் அழுக்குப் படியும் செயல்களுக்குப் பிறகும் கையைக்கழுவுவதைக் கற்றுக்கொடுங்கள். உங்களுடைய வீட்டைப்போல் அல்லாமல், பள்ளிக்கூடத்திலோ அல்லது குழந்தைகள் காப்பகத்திலோ கழிப்பறைகள் முறை மாறுபட்டு இருக்கும். சோப்பு வெளியேற்றும் மற்றும் கை உலர்த்தும் கருவி ஆகியவற்றை பயன்படுத்த கற்றுக்கொடுக்க வேண்டியிருக்கும். பள்ளி கழிவறையில் துடைப்பதற்கு காகிதம் பயன்படுத்துவதாக இருந்தால், கையை துடைத்த பின்னர் காகிதத்தை கழிவுக் கூடையில் போட வேண்டும் என்பதை நினைவுப் படுத்தவும்.

***வீட்டில் பயன்படுத்துவதற்கான 'கையைக் கழுவுவது' எப்படி என்பதன் செயல் முறைகள் வரிசை இங்கே கொடுக்கப் பட்டுள்ளது:***

இயக்கு



சோப்பை எடு



கையைக் கழுவும்



மூடு



கையை உலர்த்து

